**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை

**<u>ஐ.எ.எண். 02/2025</u>**
**இன்**
**<u>ஓ.எஸ்.எண்.331/2023 [CNR No.TNMD240004582023]</u>**

ராணி ... மனுதாரர்/பிரதிவாதி

// எதிராக //

மகேஸ்வரி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது, என் முன்பாக கடந்த 27.02.2026–ம் தேதி, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஏ.சி.பாலச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றிந்த வழக்குரைஞர் திரு.எம்.குபேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் இதர ஆவணங்கள் படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

## உ த் த ர வு :–

மனுதாரர்களால் இம்மனுவானது, ஆர்டர் 9 ரூல் 13 ஆப் சி.பி.சி–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

**2) மனுச்சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். தாவா அசல் வழக்கானது, கடந்த 30.08.2024 அன்று மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது. மேற்படி தேதியில் மனுதாரர் / பிரதிவாதி மஞ்சள் காமாலை நோயினால் அவதிப்பட்டார். ஆகையால், வழக்குரைஞரை சந்திக்க முடியவில்லை. எனவே, 28.11.2024 அன்று மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை ரத்து செய்ய வேண்டும் என்பதாகும்.

**3) எதிருரைச்சுருக்கம்:–**

மனு நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 18.03.2025–அன்று மனு தாக்கல் செய்து மனு குறிப்பிட்ட காரணங்களுக்காக திருப்பப்பட்டுள்ளது. அதன் பிறகு 82 நாட்கள் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறார். காலதாமதத்தை மறைக்க பொய்யான காரணங்களை கூறி மனுத் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் /வாதி தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்றுகை மனு எண். 8/25 தாக்கல் செய்திருக்கிறார். அகவே, மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்பதாகும்.

**4) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:–**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா?

**5) பிரச்சனைக்குரிய தீர்வு:-**

வாதங்கள் கேட்கப்பட்டது. தாவா வழக்கில் கடந்த 28.11.2024 அன்று மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச தீர்ப்பணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக மனுதாரர் / பிரதிவாதி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய கடந்த 02.01.2025 அன்று அன்று மனுத்தாக்கல் செய்திருக்கிறார். 82 நாட்கள் காலதாமதத்தை மன்னிப்பதற்கு இடைநிலை மனு எண். 1/2025 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு ரூ.1000/- எதிர்மனுதாரர் / வாதிக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, எதிர்மனுதாரர் / வாதி பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்றுகை மனு எண். 8/2025 தாக்கல் செய்து நிலுவையில் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் மனுதாரர் / பிரதிவாதி எதிர்மனுதாரர்/ வாதிக்கு அதிகபட்ச இழப்பீடாக காலதாமதத்தை வீணடித்ததற்காக ரூ.5,000/- செலுத்த வேண்டும். மேற்படி தொகையை ஒரு வாரத்தில் செலுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும்.

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, மனுதாரர் / பிரதிவாதி எதிர்மனுதாரர்/ வாதிக்கு ரூ.5,000/- ஒரு வார காலத்தில் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு, நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று இன்று

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.09 17:21:14 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இரு தரப்பிலும் எவ்விதமான சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.09 17:21:19 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

ஐ.ஏ.எண்.02/2025
இன்

ஓ.எஸ்.எண்.331/2023

நாள் – 09.03.2026.

சீரான/ வரைவு/ உத்தரவு